மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரியாபட்டி,
**முன்னிலை : திரு.க.யோகேஷ்வரன், B.A., L.L.B,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
காரியாபட்டி.
2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19–ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைநிலை மனு எண்.1/2025**

IN

**அசல் வழக்கு எண். 25/2025**

1. பாண்டியராஜன்
2. வெங்கிடசாமி
3. சத்தியகுமார்

(வாதிகள் தனக்காகவும் பாம்பாட்டி கிராம பொதுமக்களின் பிரதிநிதிகள் ஸ்தானத்தில் இருந்து) ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

காந்திமதி .. எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது இறுதியான விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்னர் 12.12.2025 ம் தேதி வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.கணேஷ்பாண்டி அவர்களும், எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.கவியரசன் அவர்களும், நாளிதழ் அறிவிப்பு மற்றும் டாம்டாம் அறிவிப்பு கொடுத்தபின்னரும் எதிர்ப்பாளர் எவரும் முன்னிலையாகாத நிலையிலும், இரு தரப்பு வாதங்களை கேட்டறிந்தும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மேற்படி மனுதாரர்கள்/வாதிகள் பாம்பாட்டி கிராம பொது மக்களுக்காக பிரதிநிதிகளாகவும் இருந்து, பிரதிநிதி ஸ்தானத்தில் அசல் வழக்கினை சமூக நீதிமன்றத்தில் மனுதாரர்கள் நடத்துவதற்கு அனுமதிக்க உத்தரவிட வேண்டி கட்டளை 1 விதி 8 மற்றும் பிரிவு 151 சிபிசி படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1). மனுவின் சுருக்கம்:-**

மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவார். அசல் வழக்கானது தபசில் சொத்தில் கிராம பொதுமக்களின் பொது பாத்தியமான காளியம்மன் கோவில் இடத்தினை ஆக்கிரமிப்பு செய்துபொதுமக்களின் உரிமைக்கு இடையூறு செய்யும் வகையில் பிரதிவாதி எந்தவித செயலினையும் மேற்கொள்ளக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர்கள் ஊரில் 100 குடும்பங்களுக்கு மேலாக குடியிருந்து வருவதால் அனைவரையும் அசல் வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கை நடத்தினால் நீதிமன்றத்தில் பொன்னான ரேநம் வீணாடிக்கப்படும் என்றும், தாங்கள் பொதுமக்களின் நலனுக்கு விரோதமாக எந்த செயலும் செய்ய மாட்டோம் என்றும், எனவே, மனுதாரர்கள் தங்களுக்காகவும், தாங்கள் சார்ந்துள்ள பாம்பாட்டி கிராம பொது மக்களின் பிரதிநிதிகள் ஸ்தானத்தில் வழக்கு தாக்கல் செய்ய அனுமதி வழங்ககோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். இந்த மனுவை அனுமதிக்கும் பட்சத்தில் எதிர்மனுதாரருக்கு எந்தவொரு இழப்பும் ஏற்படபோவதில்லை.

2). **எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-**

மனுதாரர்களின் மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. தாவா கோவிலில் மனுதாரர்களுக்கு வழிபாட்டு உரிமையைத்தவிர வேறு எந்தவிதமான உரிமையும் இல்லை. 2ம்மனுதாரர் பாம்பாட்டி கிராமத்தில் குடியிருக்கவில்லை. 2ம் மனுதாரர் இந்த எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்பதற்காக மற்ற மனுதாரர்களை வைத்து மோசடியாக அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர்கள் தாவாச்சொத்து குறித்து வருவாய்துறையினர் தவறான வகைப்பாட்டினை தங்களுக்கு சாதகமாகப் செல்வாக்கினை பயன்படுத்தி தாவா சொத்தினை எதிர்மனுதாரரிடமிருந்து எப்படியாவது அபகரிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேலும் தாவா சொத்து ஆக்குபைடு நத்தம் என்பதால் சுமார் 85 வருடங்களுக்கும் மேலாக இந்த எதிர்மனுதாரருக்கு அனுபவ பாத்தியம் உள்ளது

என்றும், நத்தம் சர்வேயின் போது ஏற்பட்ட வருவாய்த்துறையின் தவறான வகைப்பாடு தாவாச்சொத்தில் எதிர்மனுதாரருக்குள்ள உரிமையினை ஒருபோதும் கட்டுப்படுத்தாது என்றும் கூறியுள்ளார். எனவே, மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

3. <u>தீர்வு காணவேண்டிய பிரச்சனை:–</u>

இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

<u>4. தீர்வு முடிவு:–</u>

5(1).இம்மனு, எதிருரை, வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இருதரப்பு வாதங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன. இம்மனுவானது மனுதாரர்கள் தங்களுக்காகவும் பாம்பாட்டி கிராம பொது மக்கள் சார்பாகவும் இருந்து பிரதிநிதி ஸ்தானத்தில் இருந்து வழக்கை நடத்துவதற்கு அனுமதி கோரி இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவுப்படி நாளிதழில் விளம்பரம் கொடுக்கப்பட்டு அதுகுறித்து அந்த பகுதிவாழ்மக்களிடம் பறையடிப்பு மூலம் தகவலும் சொல்லப்பட்டுள்ள விவரம் தெரியவருகிறது.

எதிர்மனுதாரர் தரப்பில் தாவா கோவிலில் மனுதாரர்களுக்கு வழிபாட்டு உரிமையைத்தவிர வேறு எந்தவிதமான உரிமையும் இல்லை என்றும் கிராமத்தில் குடியிருக்காத 2ம்மனுதாரர் இந்த எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்பதற்காக மற்ற மனுதாரர்களை வைத்து மோசடியாக அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர்கள் தாவாச்சொத்து குறித்து வருவாய்துறையினர் தவறான வகைப்பாட்டினை தங்களுக்கு சாதகமாக்கிக் செல்வாக்கினை பயன்படுத்தி தாவா சொத்தினை எதிர்மனுதாரரிடமிருந்து எப்படியாவது அபகரிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவா சொத்து ஆக்குபைடு நத்தம் என்பதால் சுமார் 85 வருடங்களுக்கும் மேலாக இந்த எதிர்மனுதாரருக்கு அனுபவ பாத்தியம் உள்ளது என்றும், நத்தம் சர்வேயின் போது ஏற்பட்ட

வருவாய்த்துறையின் தவறான வகைப்பாடு தாவாச்சொத்தில் எதிர்மனுதாரருக்குள்ள உரிமையினை ஒருபோதும் கட்டுப்படுத்தாது என்று கூறப்பட்டுள்ளது.

மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் பாம்பாட்டி கிராம பொது மக்கள் சார்பாக பிரதிநிதித்துவ ஸ்தானத்தில் வழக்கை நடத்த அனுமதி அளித்து உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்று கூறப்பட்டுள்ளதையும், இந்த மனுவில் தினசரி செய்தி தாள் விளம்பரம் மற்றும் டாம் டாம் நிறைவேற்றப்பட்ட பின்பும் ஆட்சேபனைதாரர்கள் யாரும் நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்பதை கருத்தில் கொண்டு பார்க்கின்றபோது இந்தமனுவினை அனுமதித்து உத்தரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**<u>6. இறுதிமுடிவு:–</u>**

**இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை குறித்து உத்தரவு இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
காரியாபட்டி.

**<u>மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்.</u>**

இல்லை.

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
காரியாபட்டி.

| |
|---|
| மா.உ.ம.நீ.ந.நீ. காரியாபட்டி, |
| IA.No. 01/2025 |
| in |
| O.S.No. 25/2025 |
| உத்தரவு |
| நாள். 19.12.2025 |